**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**OS – 175/2021**

நாள் 04.06.2025

PW2 – பெரியசாமி

த/பெ – திருமலைசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of June 2025.)**

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு 2–ம் பிரதிவாதி சக்திவேல் என்பவரை கடந்த 10 வருட காலமாக தெரியும். 2–ம் பிரதிவாதி சொந்தமாக ஆட்டோ வைத்து ஓட்டி வருகிறார். 2–ம் பிரதிவாதிக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. 2–ம் பிரதிவாதியின் வீட்டு முகவரி எனக்குத் தெரியாது. வாதியை எனக்கு கடந்த 10 வருடத்திற்கு மேலாக தெரியும். நான் நிலத்தரகராக திருப்பூர் மாவட்டம் மற்றும் கோவை மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டத்திலும் தொழில் செய்து வருகிறேன். 1–ம் பிரதிவாதி 2–ம் பிரதிவாதியின் அப்பா ஆவார். 1–ம் பிரதிவாதிக்கு சுமார் 70 வயதுக்கு மேல் இருக்கும். 2–ம் பிரதிவாதிக்கு சுமார் 46 வயது இருக்கும். 1–ம் பிரதிவாதி இந்த வழக்கில் ஆஜராகி வழக்கு நடத்தி வருகின்ற விபரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதிக்கும், 2–ம் பிரதிவாதிக்கும் இடையே அவிநாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.178/2020 என்ற வழக்கு நடந்து வருகின்ற விபரம் எனக்குத் தெரியாது.

2. நான் தெக்கலூர் பக்கம் உள்ள நிலம் சம்பந்தமாகவும் மற்றும் அவிநாசி பக்கம் உள்ள நிலம் சம்பந்தமாகவும் வாதியை பார்க்க வந்தேன். ஆனால், வாதிக்கும் எனக்கும் இடையே இடம் சம்பந்தமாக எந்தவொரு வியாபாரம் எதுவும் நடக்கவில்லை. வாதிக்கு நிலத்தரகராக நான் இருந்து

4,5 இடங்களை வியாபாரம் செய்து கொடுத்துள்ளேன். அது சம்பந்தமான பதிவு ஆவணங்கள் என்னால் தாக்கல் செய்ய முடியாது. நான் வாதிக்கு ஆதரவாக தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதி செம்பியம்பாளையம், பெரியநாதம்பாளையம் ஊரை சேர்ந்தவர் என்ற விபரம் மட்டும் தெரியும், அவருடைய வீட்டு கதவு எண் எனக்குத் தெரியாது. வாதியின் அப்பா உயிரோடு இல்லை. வாதியின் அப்பா பெயர் எனக்குத் தெரியாது. வாதியின் அப்பா எப்படி இறந்தார் என்று எனக்கு நேரடியாக தெரியாது. 1–ம் பிரதிவாதிக்கும், 2–ம் பிரதிவாதிக்கும்இடையே மனஸ்தாபம் இருந்து விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. 1–ம் பிரதிவாதியின் மற்றொரு மகன் பெயர் பிரதாப் ஆகும். அந்த பிரதாப் பழைய இரும்பு வியாபாரம் செய்து வந்தார். இந்த தாவா சொத்து விபரம் பற்றி எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது. தாவா சொத்தை யார் வாங்கினார்கள், எப்போது கிரையம் வாங்கினார்கள், என்ன விலைக்கு வாங்கினார்கள் என்ற விபரம் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதி இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் பிரதிவாதிகள் மீது புரோநோட் தாக்கல் செய்துள்ளார்.

3. வாதி 1,2 பிரதிவாதிகளிடம் இருந்து ரூ.5,00,000/– கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த ரூ.5,00,000/–த்திற்கு வாதிக்கு 1–ம் பிரதிவாதி 27.10.2018–ம் தேதியில் புரோநோட் எழுதி கொடுத்துள்ளார். அந்த 27.10.2018–ம் தேதியிட்ட புரோநோட்டின் படி ரூ.5,00,000/– கடனை வட்டியுடன் வசூல் செய்ய கோரி தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். புரோநோட் பற்றிய விபரத்தை வாதி தான் எனக்கு சொன்னார் என்றால் சரிதான். அந்த புரோநோட்டில் 1–ம் பிரதிவாதியின் மற்றொரு மகன் பிரதாப் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். மற்றொரு

சாட்சியின் பெயர் எனக்கு தெரியவில்லை. அந்த புரோநோட்டை எழுதிய நபர், அவருடைய பெயர் விலாசம் பற்றி எனக்குத் தெரியாது. புரோநோட்டை எழுதிய போது நான் அதை பார்த்தேன். நான் அந்த புரேநோட்டில் சாட்சியாக கையொப்பம் எதுவும் செய்யவில்லை. வாதிக்காக வேண்டி இந்த வழக்கை தவிர வேறு எந்த வழக்கிலும் நான் சாட்சியம் அளிக்கவில்லை. வாதிக்கும், 1–ம் பிரதிவாதிக்கும் இடையே கடன் வாங்கிய வரையில் பேச்சு வார்த்தை இருந்த விபரம் எனக்குத் தெரியும், கடன் வாங்கிய பிறகு அவர்களுக்கு இடையே பேச்சு வார்த்தை இருக்கிறதா என்று எனக்குத் தெரியாது. அந்த 27.10.2018–ம் தேதியிட்ட புரோநோட்டில் எத்தனை ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டப்பட்டிருந்தது என்றால் ஒரு ரெவின்யூ ஸ்டாம்ப் மட்டும் தான் ஒட்டப்பட்டிருந்தது. அந்த புரோநோட்டில் எழுதியவர் கையொப்பம் செய்த பிறகு சாட்சி பிரதாப் கையொப்பம் செய்தார். அவருக்கு பிறகு மற்றொரு சாட்சி கையொப்பம் செய்தார். அதற்கு பிறகு வேறு யாரும் அந்த புரோநோட்டில் கையொப்பம் செய்யவில்லை. அந்த புரோநோட் எழுதிய தேதிக்கு பிறகு 1–ம் பிரதிவாதி நடராஜை நான் பார்த்தது கிடையாது, ஆனால், 2–ம் பிரதிவாதி சக்திவேலை நான் வாரம் ஒரு முறை பார்த்து தான் வருகிறேன். 1–ம் பிரதிவாதி அவரது மகன் 2–ம் பிரதிவாதி மீது திருப்பூர் மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்துள்ள விபரம் எதுவும் எனக்குத் தெரியாது. இந்த வழக்கு பற்றிய விபரம் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாதுஎன்றும் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல்செய்துள்ளார் என்ற விபரமே எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் வாதியிடம் 1–ம் பிரதிவாதி கடன் வாங்கிய போது உடன் இருந்ததாக நான்

சொல்வது பொய் என்றால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிப்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.06.04 13:30:53 +0530

**Subordinate Judge,**
**Avinashi.**